# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை வாழ்த்திய பெருமக்கள்!



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை அவரது பிறந்தநாளையொட்டி வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வாழ்த்தினார்.விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி, தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத் தலைவர் டாக்டர். பொன்.அசோக்சிகாமணி, சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா ஆகியோர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை 27.11.2024 அன்று அவரது பிறந்தநாளையொட்டி, பால்வளம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை 27.11.2024 அன்று அவரது பிறந்தநாளையொட்டி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை 27.11.2024 அன்று அவரது பிறந்தநாளையொட்டி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை 27.11.2024 அன்று அவரது பிறந்தநாளையொட்டி மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை 27.11.2024 அன்று அவரது பிறந்தநாளையொட்டி சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை 27.11.2024 அன்று அவரது பிறந்தநாளையொட்டி தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.



கழக இளைஞர் அணியின் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு வாழ்த்துத் தெரிவித்து, கழக இளைஞர் அணியின் துணைச் செயலாளர்கள் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் தனது முதல் மாத உரிமைத் தொகையை இளைஞர்களின் வளர்ச்சி நிவாரண நிதிக்காக கே.இ.பிரகாஷ் எம்.பி. வழங்கினார்.




தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 27.11.2024 அன்று திருநங்கையர் மற்றும் திருநம்பியரின் முன்னேற்றத்துக்காக செயல்பட்டு வரும் சகோதரன் அமைப்பு மற்றும் CGI IT, வணிக ஆலோசனை சேவை நிறுவனத்தின் சமூக பங்களிப்பின் மூலம் வழங்கப்பட்ட கணினி, பேக்கிங், தையல், ஓட்டுநர் மற்றும் மொபைல் சர்வீஸ் பயிற்சி உள்ளிட்ட தொழிற்பயிற்சிகளை பயிற்சி நிறைவு செய்த 320 நபர்களுக்கு சான்றிதழ் வழங்குவதன் அடையாளமாக 20 நபர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சகோதரன் அமைப்பு நிர்வாகிகள் மற்றும் CGI IT நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



சென்னை, ‘குறிஞ்சி’ இல்லத்தில் – கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது பிறந்த நாளில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் ஏற்பாட்டில் தயாரிக்கப்பட்டுள்ள “தி.மு.க. நாள்காட்டி – 2025ஐ வெளியிட்டார். நூற்றாண்டு கண்ட திராவிட இயக்கத்தின் வரலாற்றையும், அவ்வரலாற்றில் சிறப்புமிக்க நாள்களையும் இளைஞர்களிடம் கொண்டு செல்லும் முன்னெடுப்பாகவும் – நீதிக்கட்சி – திராவிடர் கழகம் – திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில் இன்று வரையிலான முக்கியமான தலைவர்கள், மக்களுக்காக அவர்கள் முன்னெடுத்த போராட்டங்கள், தீர்மானங்கள், இயற்றப்பட்ட சமூகநீதிச் சட்டங்கள் ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகளை நினைவு கூரும் விதமாகவும் “தி.மு.க. நாள்காட்டி 2025” தயாரிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்நாள் காட்டியை நெறிமுறைப்படுத்திய எழுத்தாளரும் – ‘தி.மு.க. ரைடர்ஸ்’ ஒருங்கிணைப்பாளருமான அ.ராஜா தமிழ் மாறன், கழக மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ் காந்தி ஆகியோர் இந்நாள் காட்டி வெளியீட்டின் போது உடனிருந்தார்கள்.